# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19–A ருக்மினி லட்சுமிபதி சாலை, ( டிட்கோ வளாகம்),
எழும்பூர், சென்னை – 600 008
தொலைபேசி 28411376, 28411378, 28411379. தொலைநகல்: 28411377
மின்னஞ்சல்: tnercmail@gmail.com இணையதளம்: www.tnerc.gov.in


எண். 06 / 2009
நாள். 04–05–2009

## செய்திக் குறிப்பு

பொருள் : உயிர்க்கூளம் மூலமான மின் சக்தியைக் கொள்முதல் செய்வதற்கு மின்கட்டணவீதத்தினை நிர்ணயித்தல்.

*********

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சம்பந்தப்பட்டவர்கள் (Stakeholders) அனைவருடனும் கடந்த ஒன்பது மாதங்களாக கலந்தாய்வு செய்து உயிர்க்கூளம் மூலமான மின் சக்தியைக் கொள்முதல் செய்வதற்கு மின் கட்டணவீதத்தினை யூனிட் ஒன்றுக்கு ரூ.3.15–லிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.4.50–ஆக அதிகரித்துள்ளது. யூனிட் ஒன்றுக்கு ரூ.4.50 என்பது நாட்டிலேயே மிகவும் அதிகமானதாகும். மகாராஷ்டிரம் மற்றும் ஆந்திரா பிரதேசம், முறையே யூனிட் ஒன்றுக்கு ரூ.4.28 மற்றும் யூனிட் ஒன்றுக்கு ரூ.4.26 என்று தமிழ்நாடு மின் கட்டணவீதத்தின் அளவுக்கேற்ப நிர்ணயித்துள்ளது.

2. தற்போதைய மின் கட்டண வீத ஆணை, 16–07–2008 அன்று வல்லுநர்களின் வட்டமேஜை மாநாட்டில் விரிவான கலந்தாய்வு நடைமுறை செய்த பின்பு முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆணையம், சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக 12–12–2008 அன்று கலந்தாய்வு ஆவணத்தை (Consultative Papers) வெளியிட்டது. 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 88ஆம்பிரிவின் ஷரத்துக்களின்படி 26–02–2009 அன்று மாநில ஆலோசனைக்குழு கூடி அந்த ஆவணம் குறித்து ஆலோசனை அளித்தது. அந்தச் சட்டத்தின் 64ஆம் பிரிவிற்கிணங்க ஆணையத்தினால் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் 05–03–2009 அன்று நடத்தப்பட்டது.

3. உயிர்க்கூள எரிபொருள் செலவின் அதிகரிப்பின் பொருட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக உயிர்க்கூள மின் நிலையங்களின் பயன்பாட்டுத் திறன் வெகுவாகக் குறைந்துள்ளது. 2007–08 ஆண்டின் போது பயன்பாட்டுத்திறன் 5 விழுக்காட்டிலிருந்து 70 விழுக்காடாக இருந்தது. 2008–09 ஆண்டின் போது 3 விழுக்காட்டிலிருந்து 48 விழுக்காடாக குறைந்தது. உயிர்க்கூள எரிபொருளின் பிற பயன்படுத்துநர்கள் உயிர்க்கூளம் மூலமான மின் நிலையங்களுக்கு மாறுபடாத அளவில் உயிர்க்கூள எரிபொருளைக் கொள்முதல் செய்துள்ளனர். மெட்ரிக் டன் (MT) ஒன்றுக்கு ரூ.1000/– என்ற தற்போதைய வீதத்தினை இரு மடங்காக உயர்த்தி எரிபொருள் செலவினை நிர்ணயிக்கையில் இந்தக் குறைபாட்டினை ஆணையம் கணக்கில் எடுத்துக் கொண்டது. இந்த மின் கட்டணவீத ஆணையின் இன்னொரு முக்கிய அம்சமானது, ஆணையின் முந்தைய ஒற்றைப்பங்கு (single part) மின் கட்டணவீதத்திலிருந்து இரண்டு பங்கு (two part) மின் கட்டணவீதத்தினை அறிமுகப்படுத்துதல் ஆகும். இரண்டு பங்கு மின் கட்டணவீதம் நிலையான செலவுக்கும் மாறக்கூடிய செலவுக்கும் வகை செய்கிறது. உயிர்க்கூள எரிபொருள் செலவில் உள்ள மாற்றங்களின் பொருட்டு மாறக்கூடிய செலவு எடுத்துக்கொள்ளப்படும். ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள உயிர்க்கூள மின் உற்பத்தியாளர்களும் இந்த மாறக்கூடிய செலவினத்தால் பயனடைவர். இரண்டு பங்கு மின்கட்டணவீத முறை மகாராஷ்டிரம், ஆந்திர பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் சிறிது காலமாக பழக்கத்தில் இருந்துவருகிறது.

4. நாட்டில் உள்ள உயிர்க்கூளம் மூலமான மின் நிலையங்களின் நிறுவுதிறன் 683 மெகாவாட் (MW) ஆகும். இதில் தமிழ்நாட்டின் கணக்கு 147 மெகாவாட் (MW) ஆகும். ஆந்திர பிரதேசம், சட்டீஸ்கர் ஆகிய மாநிலங்களின் நிறுவுதிறன்கள் தமிழ்நாட்டினைவிட அதிகமாகும்.

(வெ. காசி)
உதவிச் செயலாளர்